# ஐந்திணைகளில் தலைவி

***முனைவர் தி. விஜி***
உதவிப் பேராசிரியர்
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (சுயநிதிப் பிரிவு)
குற்றாலம்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958719

## முன்னுரை

இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறைகளை எதிரொலித்துக் காட்டும் தன்மையுடையது. ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் கூறுகளை அந்தக் காலகட்டத்தில் தோன்றிய இலக்கியங்கள் பிரதிபலித்துக் காட்டுகின்றன. இலக்கியங்களின் துணை கொண்டு மனித சமூகத்தின் படிநிலை வளர்ச்சியினை எளிமையாகக் கண்டறியலாம். சங்ககாலத்தில் பெண்களுக்கு மதிப்பும், மரியாதையும் இருந்தது. பெண்கள் கற்புடையவர்களாகவும், கணவனைத் தெய்வமாகத் தொழுபவர்களாகவும், உடன்கட்டை ஏறுதலும், கைம்மை நோன்பு இருத்தலுமாகிய பண்பினை உடையவர்களாகவும் இருந்தனர். கணவனின் மனம் கோணாமல் நடந்து கொள்ளுதலே பெண்களின் பொதுவான வாழ்வு முறையாக இருந்துள்ளது. சங்ககாலப் பெண்கள் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, அடக்கம், பொறுமை, இரக்கம் போன்ற பண்புகளுடன் அழகு கொண்டவர்களாகவும் இருந்தனர் என்பதற்குச் சங்கப் பாடல்கள் சான்றாக விளங்குகின்றன. ஐந்திணைகளில் தலைவி பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஐந்திணைகளில் தலைவி

சங்க இலக்கியத்தில் ஆணும் பெண்ணும் ஒத்த நிலையினராகக் கருதப்பட்டனர். இயற்கையின் வழியே நின்று, உணர்வுகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்பானவை என்ற யதார்த்த நிலையினை இலக்கியங்கள் காட்டுகின்றன. ஒத்த கிழவனும் கிழத்தியும் என்றே சங்கஇலக்கியங்கள் அதனைச் சுட்டிச் சென்றுள்ளன.

ஆனால் பெரும்பான்மையான பாடல்களில் தலைவனின் ஆற்றல், வீரம் போன்றவற்றை சுட்டிக்காட்டும் விதமாக பேசப்பட்டுள்ளது. காரணம் என்னவென்றால் வினை செய்யும் ஆற்றல் நிலையில் சிறந்தோர் எனக் குறிப்பிடும் வகையில் தான் தலைவனே பெரும்பகுதி காட்டப்படுகின்றான்.

ஆனால், பல பாடல்களில் தலைவியின் உருவ அழகினைக் கொண்டும், கற்பு சார்ந்த வரையறையைக் கொண்டும் பாடியுள்ளனர்.

"குடிக்கு விளக்கு"[1]

"மனை முதல்"[2]

"மனைக்கு விளக்கு"[3]

"கற்பு மேம்படுவி"[4]

இப்பாடல்கள் பெண்ணின் பெருஞ்சிறப்பை உணர்த்தும் விதமாக இருந்தாலும் அவை குடும்பம் என்ற அமைப்பிற்குள் மட்டுமே வைத்து பார்க்கப்படுகின்றாள் தலைவி.

மேலும் தாழிருங் கூந்தல், பேரமர்க்கண்ணி, மெல்லியல் அரிவை, பேரியல் அரிவை, சுடர்த் தொடி, மடவரல், போதார் கூந்தல், பல்லிருங் கூந்தல், தேமொழி அரிவை, நன்னுதல் அரிவை, நறுமென்கூந்தல் என்று தலைவி உடல்நிலையில் வைத்து உயர்த்தப்படுகின்றாள். இங்ஙனம் தலைவியர்க்கு அமைந்த உறுப்பு நலன்கள், இயல்புகள் என்பன அவர்களைச் சுட்டும் பெயர்களாய் அமைகின்றன.

பெரும்பான்மையான பாடல்களில் தலைவி இளமை நலத்திற்குரியவளாகவே பேசப்பட்டுள்ளாள். தலைவனும் தலைவியும் பல இடங்களில் இணையாகப் பேசப்பட்டாலும் தலைவியைப் பற்றிக் குறிப்பிடுகையில் அழகின் வெளிப்பாட்டினைக் கொண்டு பாடப்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

சங்க இலக்கியத்தில் அகப்பாடல்கள் சிறப்பிடம் பெற்றிருத்தலைப் போலவே, அதனுள் வரும் தலைவியும் சிறப்பிடம் பெற்றிருக்கிறாள். அகப்பாடல்களில் இடம்பெறும் தலைவி, திருமணத்திற்கு முன்பான களவு வாழ்விலும், திருமணத்திற்குப் பின்பான கற்பு வாழ்விலும் என இருநிலைகளில் பாடுபொருளாகி வருகின்றாள். எல்லா நிலைகளிலும் அன்புநலம் கனியப்பெற்று அவள் வாழ்வே தலைவியைத் தன்னிகர் அற்றவளாக்குகிறது. தலைவியானவள் இயற்கையின் மீதும் பறவைகள் மீதும் அன்பு காட்டுவாள். வளர்ந்த நிலையில் தோழிகள் மீதும், தனக்கு நிகரான இளைஞன் மீதும் அன்பினைக் காட்டுகின்றாள்.

இறுதியாக குடும்பத் தலைவியான பின்பு கணவனிடத்தும், குழந்தைகளிடத்தும், சுற்றங்களிடத்தும் அன்பு காட்டுகின்றாள். இந்த அன்பு நிலைக்குள்ளே கட்டுண்ட தலைவியின் தூய அன்பினையே அன்பின் ஐந்திணை என்று சொல்லப்பட்டது. இவை தலைவியை அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**குறிஞ்சித்திணையில் தலைவி**

அகத்திணை ஏழினுள் நடுவணுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்தும் களவுக் காதலுக்குப் பொதுவாக உரியன என்று தொல்காப்பியர் வரையறைப்படுத்தியுள்ளார். முதலாவதாகச் சொல்லப்பட்ட குறிஞ்சியைக் களவுத்திணை எனக் குறிப்பிடலாம். குறிஞ்சித் தலைவி பெண்மையின் புகழ்வாய்ந்த உருவாகக் காட்டப் பெறுகிறாள். தலைவன், தலைவியின் இன்பமிக்க சந்திப்புகள் தலைவனால் விளக்கி உரைக்கப்படுமே அல்லாமல் தலைவியால் அவை உரக்கச் சிந்திக்கவும் படுவதில்லை. இதற்கு மாறாக அவள் களவுக் காதலால் உண்டாகும் துன்பங்களையே சிந்திக்கிறாள்.

**“குறிஞ்சித் தலைவி கொடிச்சி, கானவர் மகள்**
**என அழைக்கப்படுகிறாள்.**
**முகைஞர் இளங்கெயிற் இன்னகை மடந்தை”[5]**

என்றும்,

**“குன்றக் குறவன் கடவுட் பேணி**
**இரந்தனள் பெற்ற எல்வளைக் குறுமகள்”[6]**

எனக் குறிஞ்சித் தலைவி வருணிக்கப்படுகின்றாள். இந்த வருணனைகள் அவளது உடல் அழகையும் அணியையும் அவள் தந்தையின் உடைமை என்பதையும் காட்டுவனவாக அமைந்துள்ளன. மேலும், அவள் கடவுளுக்குக் கற்புடையவளாகக் காட்டப்படுகிறாள்.

**“நெடிய திரண்ட தோள்வளை நெகிழ்த்த**
**கொடியன் ஆகிய குன்றுகெழு நாடன்**
**வருவதோர் காலை இன்முகம் திரியாது**
**கடவுட் கற்பின் அவன் எதிர்பேணி”[7]**

என்று கூறப்படுகின்றது. அகநானூற்றுப் பாடல்களில் வரும் சில குறிப்புகள் தலைவியின் நிலையைச் சற்று வேறுபடுத்திச் சித்தரிக்கின்றன. அவள் அருமையானவளாகக் கூறப்படுகிறாள்.

**“அருந்தெறல் மரபின் கடவுள் காப்ப**
**பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை**
**அணங்குடை வரைப்பின் பாழி ஆங்கண்**
**வேண்முது மாக்கள் வியல் நகர்க் கரந்த**
**அருங்கல வெறுக்கையின் அரியோள்”[8]**

என்றும்,

***“சூரர மகளிரின் பெற்ற கரியோள்”*** [9]

என்றும்,

***“நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொல்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமை நன்குஅறிந்தும் அன்னோள்
துன்னலம் மாதோ”*** [10]

எனக் குறிஞ்சித் தலைவி வருணிக்கப்படுகின்றாள். அத்துடன் காவலுக்கு உட்பட்டவளாகவும் காணப்படுகிறாள்.

***“மல்லல் ஆவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்”*** [11]

தலைவிக்கு ஏற்படுத்தப்பட்ட காவல் கூறப்படுகின்றது. மேலும் அகம். 322ஆம் பாடலில்உயரத்தில்இருக்கும்தேன்போலப்பெற முடியாதவள் தலைவி எனக் கூறப்படுகின்றாள்.

குறிஞ்சி நிலத்து அக ஒழுக்கம் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகும். ஆனால் குறிஞ்சிப் பாடல்களில் புணர்தலும், புணர்தல் நிமித்தம் கூறப்பட்டாலும் தலைவியின் இரங்கல் நிலையே அதிகம் பேசப்பட்டுள்ளது. தன்னை விட்டுப் பிரிந்த தலைவனை வாழ்த்துவதற்காக நன்னெடுங்குன்றம் பாடும்படி அகவன் மகளைக் கேட்பாள். இவ்வாறாக குறிஞ்சி நிலத் தலைவியின் ஆழமான காதல் புலப்படுகின்றது.

### முல்லை நிலத் தலைவி

முல்லைத் திணையில் பிரிந்த தன் கணவன் வரவு நோக்கிக் கவலையோடு காத்திருக்கும் கற்புடைய மனைவியின் நிலையைக் காணலாம். இதனைக் கற்புத் திணை என்றும் குறிக்கலாம். முல்லைப் பாடல்கள் யாவற்றிலும் மையக்கருத்து தலைவன் பகைவனை நோக்கிச் செல்லுதலும், தலைவி காத்திருத்தலுமே ஆகும்.

காதலன் திரும்ப வரக் காத்திருத்தல் முல்லை உரிப்பொருளாக அகத்திணை மரபில் அழைக்கப்படுகிறது.

***“பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவி சேர் மருங்கில் புத்தமுல்லை
வெருகு சிரித்தன்ன பசுவு மென் பிணிக்
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசின் - தோழி - பொருட் பிரிந்தோரே”*** [12]

என்றும்,

***“அவரோ வாரார் - முல்லையும் புத்தன
பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே”*** [13]

என்று பிரிவாற்றமையைப் பேசும் முல்லைத் திணைப் பாடல்கள் காத்திருத்தலை சுட்டிச் செல்கின்றன. எதிர்பார்த்த காதலன் இதுவரை வந்து சேராத உறுத்தலில் தலைவி இருப்பதை முல்லைத் திணைப் பாடல்கள் சுட்டுகின்றது.

குறிஞ்சித் தலைவியுடன் ஒப்பிடும் போது முல்லையில் பெரும்பாலும் மணம் முடித்த தலைவியாகவே தென்படுகிறாள். கணவனுடன் சேர்ந்து வாழ்பவளாகவும், கணவன் பொருள் வயிற்பிரியும் போதும், பகைவயிற் பிரியும் போதும் வீட்டில் இருப்பவளாகவும் சித்தரிக்கப்படுகின்றாள். அவள் புதல்வனுடன் சேர்த்துப் பேசப்படுகின்றாள்.

***“விருந்து விருப்புறூஉம் பெருற் தோட்குறுமகள்
மின்ஒளிர் அவர்இழை நல்நகர் விளங்க
நடைநாட் செய்த நாவிலாச் சீறடிப்
புங்கட் புதல்வன் உறங்குவயின் ஒல்கி
வந்தீக எந்தை என்னும்
அம்தீம் கிளவி கேட்கம் நாமே”*** [14]

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி தன் புதல்வனைக் கண்டே தன் துயரத்தைத் தணித்துக் கொள்வாள். புதல்வன் தன் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தருதலால் தந்தை வந்துவிட்டார் என்று கூறி புதல்வனை எழுப்புகின்றாள். தலைவியும் புதல்வனும் தன்னைக் காணும்போது பெரிதும் மகிழ்வர். ஆகவே தேரை விரைந்து செலுத்துவாயாக என்று தலைவன் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பகைவயிற் பிரிந்த தலைவன் மீண்டும் வரும் வரை தலைவி கற்புடன் வீட்டிலிருந்து தன் துயரங்களை ஆற்றி இருத்தல் முக்கியப் பண்பாகும். எனவே முல்லைத் தலைவி சாதாரண இடைப்பெண்

அல்ல. குறிஞ்சியில் தலைவி திணை காத்தல், உணக்கல், கழங்காத்தல் ஆகியவற்றைச் செய்பவளாகக் காட்டப்படுகிறாள். ஆனால் முல்லைத் தலைவி எங்கேனும் ஆயரின் தொழிலைச் செய்தவளாகக் காட்டப் பெறவில்லை. பகைவயிற் பிரிந்த தலைவியின் நிலை நெடுநல்வாடையிலும், முல்லைப்பாட்டிலும் அரச பரம்பரைக்குரியதாகக் காட்டப்படுகிறது.

**"நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்**
**செம்முது செவிலியர் பல பாராட்ட**
**பொலஞ்செய் கிண்கிணி நல்பெறு சேவடி**
**மணல்மலி முற்றத்து நிலம்வடுக் கொளாஅ**
**மனைஉறை புறவின் செங்கால் சேவல்**
**துணையொடு குறும்பறை பயிற்றி மேல்செல**
**விளையாடு ஆயத்து இளையோர்க் காண்டொறும்**
**நம்வயின் நினையும் நன்னுதல் அரிவை"**[15]

எனச் செவிலியர் பாராட்டும் தலைவி காட்டப்படுகிறாள். நெடுநல்வாடையிலும் செவிலியரின் அரவணைப்பில் தலைவி உள்ளாள். தலைவன் வராததால் தலைவி காத் திருத்தலையும் காணமுடிகின்றது.

**முடிவுரை**

பண்டைத் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் பெண்ணை வரையறுத்துள்ளமையும் பண்டையத் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்ணின் நிலையையும் அறியமுடிகிறது. ஐந்திணை களிலும் தலைவி அந்தந்தத் திணைகளுக்குரியத் தொழிலைச் செய்து வந்துள்ளாள் என்பதைக் காணமுடிகிறது. களவு, கற்பு ஆகிய இருநிலைகளிலும் தலைவி சிறப்பாகப் படை க்கப்பட்டு இருப்பதையும் உணரமுடிகிறது. தலைவனுக்காகத் தலைவி காத்திருக்கிறாள் என்பதனையே ஐந்திணையும் சுட்டிச் செ ன்றுள்ளது. இவ்வாறு ஐந்திணைகளிலும் தலைவி பற்றிய செய்திகளை நம்மால் காணமுடிகிறது.